இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2015 ஒகஸ்ட்

1 மணித்தியாலம் 15 நிமிடம்

வினாத்தாள் - II

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு பின்னவல என்ற இடத்திலுள்ள யானைகள் சரணாலயத்திற்குச் சென்றோம். அங்கு யானைகள் குளிப்பதும், தும்பிக்கையால் தண்ணீரை விசிறுவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அங்கிருந்து புறப்பட்டு கண்டி மாநகருக்குச் சென்றோம். இயற்கை எழிலோடு சேர்ந்த ஓர் அழகிய நகரம் அது பூத்துக் குலுங்கும் மரங்களும் தெப்பக்குளமும் அருகே தலதா மாளிகையின் தங்கக்கூரையும் கண்டி மாநகரை தேவலோகம் போலத் திகழச்செய்தன.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(i) மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு எவ்வெவ் இடங்களுக்குச் சென்றனர் ?

....................................................................................................

(ii) "கண்ணையும் கருத்தையும் கவரும் தோற்றம்", என்னும் கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

....................................................................................................

(iii) தன்மைப் பன்மைச் சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

....................................................................................................

(iv) ஒற்றைக் கொம்பு, இரட்டை கொம்பு ஆகிய இரண்டும் இடம்பெறும் வினைச்சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

....................................................................................................

(v) தங்கக்கூரை என்பதை பிரித்து எழுதுக.

....................................................................................................

(vi) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.

....................................................................................................

more Past papers
at www.Edukinniya.lk



02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) விளையாட்டுப் போட்டியின் போது மாணவர்களின் ............. (அனிவகுப்பு / அணிவகுப்பு) இடம்பெற்றது.

(ii) காந்தியடிகள் ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்தத் ...................... (திடசங்கற்பம்/ திடசங்கட்பம்) கொண்டார்.

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) நாங்கள் தினமும் காலையில் பழங்கள் ........................................ (சாப்பிடுவோம் / சாப்பிட்டோம்.)

(ii) காகம் முட்டைகளிட்டுக் குஞ்சுகள் ........................................ (பொரித்தது/பொரித்தன)

(iii) எனது முற்றத்தில் மலரும் ஒவ்வொரு பூவும் வாசனை ........................... (மிக்கது / மிக்கவை)

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) பாலா பரீட்சையில் சித்திபெறுவதற்காக அல்லும் பகலும் பாடுபட்டான். அல்லும் பகலும் என்பதன் கருத்து ................................ (இடைவிடாது / நீண்ட காலமாக) என்பதாகும்.

(ii) "அண்ணா பேருந்தைப் பிடிப்பதற்காக **அறக்கப் பறக்க** ஓடினார்." இவ்வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள மரபுத்தொடரின் கருத்து .................................... (விரைவாக / நிதானமின்றி) என்பதாகும்.

05. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள **வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

இடர் வரும்போதும் - உள்ளம்
இரங்கிடும்போதும்.
....................................
உறவுகொள்வர் அப்பா

06. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

சுத்தமுள்ள இடமெங்கும்.
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

நீண்ட ஆயுளைப் பெறுவதற்கு எதனைப் பேணுதல் வேண்டும் ?

....................................................................................................

07. பின்வரும் பிராணியின் இளமைப் பெயரை எழுதுக.

கிரி : ....................................................


08. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய **தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் : ....................................................

09. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள **வாக்கியத்தை** எழுதுக.
மிக / தொடர்பு / மனிதனுக்கும் / இடையே / சூழலுக்கும் / காணப்படுகிறது / நெருங்கிய

....................................................................................................
....................................................................................................

10. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக




**இடமிருந்து வலம்**

1. "துக்கம் என்பதன் எதிர்ச்சொல்
3. ஆறுவது இது என்பர்

**மேலிருந்து கீழ்**

2. உண்ண உண்ணத் தித்திப்பது

11. கீழே தரபபட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து, **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) Where .................................................. (is/are) you going ?
(ii) I .................................................. (want/wants) to pluck flowers

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Please think about others
....................................................................................................

(ii) I love my country
....................................................................................................



www.Edukinniya.lk

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துகளில் எழுதுக.
நீங்கள் ஆயத்தமா ?

..............................................................................................................................

14. கீழே தரப்பட்டுள்ள சிங்கள சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

மதுருவா : ..............................................................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

சூரியன் உதிக்கிறது : ..............................................................................................

16. எல்லைகள் தெரியாத வானம், பூமி, சமுத்திரம் என்பன இயற்கையின் அபூர்வ படைப்புகளாகும். நேரத்துக்கு நேரம் மாற்றமடையும் வானம் நம் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான அனுபவங்களைப் பெற்றுதரும். விந்தைமிகு வானம் என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

♦ ..............................................................................................................

♦ ..............................................................................................................

♦ ..............................................................................................................

● தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.


17. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.
அறுபத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது.

: ..............................................................................................................

18. | 8 4 / 3 6 | பெட்டியினுள் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.


19. சமனான அடிகளைக் கொண்ட 4 முக்கோணப் பக்கங்களினால் மாத்திரம் ஆக்கப்படும் திண்மத்தின் பெயர் என்ன ?

: ..............................................................................................................

20. 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணாக எழுதுக

: ..............................................................



21. தொட்டியிலுள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோம எண்குறிகளில் எழுதுக

: ..............................................................

22. பாடசாலை ஒன்றில் கலைநிகழ்ச்சிகள் 11.30 மணிக்கு ஆரம்பமாகி 14:15 மணிக்கு முடிவடைந்தன ஆயின் கலைநிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன ?

: ..............................................................................................................

23. (i) இவ் எண்கோலத்தில் அடுத்துவரும் எண்ணை எழுதுக


3, 12, 21, 30 ..............................................................................................

(ii) கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒழுங்குமுறைக்கு ஏற்ப எண்கோலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நீக்கப்பட வேண்டிய எண் எது ?

64, 46, 32, 16, 8 ..............................................................................................

24. பரிசளிப்பு விழாவுக்காக 810 புத்தகங்கள் கிடைத்துள்ளன. ஒரு பொதியில் 4 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பரிசுப் பொதிகளைச் செய்யலாம் ?


: ......................................................................................................................................................


25. 


வட்டத்தினுள் உள்ள எண்களில் 8 இன் மடங்குகளைத் தெரிவுசெய்து எழுதுக

: ......................................................................................................................................................

26. எதிரே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{2}$ ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறந்தீட்டுக.



27. 



(i) இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன ?

: ......................................................................................................................................................

(ii) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

: ......................................................................................................................................................

28. கீழே தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையளிக்குக.



(i) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை கட்டங்களுக்குச் சமனாகும் ?

: ......................................................................................................................................................

(ii) ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1 cm உம் அகலம் 1cm உம் ஆகும். நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர் ஆகும் ?

: ......................................................................................................................................................

29. ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பால்மா பக்கெற்று | 1 | ரூ. 350 .00 |
| தேயிலை | 1 kg | ரூ. 824 .00 |
| சீனி | 1 kg | ரூ. 95 .00 |

ஒரு பாடசாலையில் சிரமதான நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்குப் பால் தேநீர் வழங்குவதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பொருள்கள் வாங்கப்பட்டன.

(i) விலைப்பட்டியலுக்கு ஏற்ப அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக.

| வாங்கிய பொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபா. | சதம் |
| சீனி | 4 பக்கெற்றுகள் | 1 400 | 00 |
| தேயிலை | 250 g | ............ | ............ |
| சீனி | 2 kg | ............ | ............ |
| | மொத்தம் | ............ | ............ |

(ii) பால் தேநீரைத் தயாரிக்கும்போது முதலில் 4 லீற்றர் 150 மில்லிலீற்றரும் இரண்டாவதாக 3 லீற்றர் 450 மில்லிலீற்றரும் தயாரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட பால் தேநீரின் மொத்த லீற்றர் எவ்வளவு ?

: ......................................................................................................................................................



www.Edukinniya.lk

**30.** 2015 ஆம் ஆண்டின் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தரம் 5 மாணவர்களால் தமது பாடசாலைத் தோட்டத்தில் நடப்பட்ட பூச்செடி வகைகள் தொடர்பான தகவல்கள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளன.


(i) நடப்பட்டுள்ள ரோஜாச் செடிகளின் எண்ணிக்கை செவ்வந்திச் செடிகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். செவ்வந்திச் செடிகளின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) மிகக் குறைந்தளவில் நடப்பட்டுள்ள செடி வகையின் பெயர் என்ன ?

: ......................................................................................

(iii) நடப்பட்டுள்ள செடிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

: ......................................................................................




- **31** தொடக்கம் **60** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து, அதன் **கீழ்க் கோடிடுக.**

**31.** வாசனை மிக்க பூ
(1) பவளமல்லிகை (2) அந்தூரியம் (3) செவ்வரத்தை (4) போகன்விலா

**32.** கொடிகளில் காய்க்கும் பழம்
(1) நெல்லி (2) திராட்சை (3) மாதுளை (4) விளாம்பழம்

**33.** கிளைகளிலும் தண்டிலும் காய்கள் உண்டாகும் தாவரம்
(1) பலா (2) வெரலு (3) மங்குஸ்தான் (4) இறப்பர்

**34.** அழகுக்காக வைக்கப்படும் பூச்சாடிகளில் பூக்களை அதிக நாட்கள் வாடாமல் வைத்திருப்பதற்காக சாடியிலுள்ள நீருடன் சேர்ப்பதற்குப் பொருத்தமான பொருள் யாது ?
(1) ஓமத்திரவகம் (2) ஓடிக்கொலோன் (3) உப்பு (4) அஸ்பிரின்

**35.** இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
(1) நீலப் புள் (2) புள்ளிக்கோட்டி (3) கருங்குரங்கு (4) மலைப்பாம்பு

**36.** சக்தியைத் தரும் உணவு
(1) பசளி (2) போஞ்சி (3) வெண்டி (4) ஈரப்பலா

**37.** எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலம் பரவும் நோய் எது ?
(1) கழிச்சல் (2) யானைக்கால் (3) நீர்வெறுப்பு (4) கொள்ளை

**38.** பயிர்களுக்கு நாசம் விளைவிக்கும் நத்தைகளை உணவாகக் கொள்ளும் விலங்கு
(1) கீரி (2) செண்பகம் (3) முள்ளம்பன்றி (4) பாம்பு

**39.** பின்வரும் எப்பாத்திரத்தில் உணவைத் தயாரிக்கும்போது புளியை இடுதல் **உகந்ததன்று** ?
(1) மட்பாத்திரத்தில் (2) அலுமினியப் பாத்திரத்தில்
(3) பிளாஸ்ரிக் பாத்திரத்தில் (4) கண்ணாடிப் பாத்திரத்தில்

**40.** நுளம்புகள் எமது அருகில் வருவதைத் தவிர்ப்பதற்காக உடம்பில் பூசுவதற்குப் பொருத்தமான எண்ணெய்
(1) மரக்கறி எண்ணெய் (2) நல்லெண்ணெய்
(3) காவட்டம் புல் எண்ணெய் (4) தேங்காய் எண்ணெய்

**41.** ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற, வேலையை இலகுவாக்கும் பொறி எது ?
(1) நீர்ச்சில்லு (2) பற்சில்லு (3) திருகுபிடி (4) கப்பி

42. 
தலையணை உறைக்கு உருவில் காட்டப்பட்டவாறான பூவைத் தைக்கும் போது பூ இதழ்களைச் சுற்றித் தைக்கவேண்டிய தையல் எது ?

(1) சங்கிலித் தையல (2) நரம்புத் தையல்
(3) கம்பளித் தையல் (4) வெட்டுக்குத்துத் தையல்

43. மகாவலி ஆறு கடலுடன் சேரும் இடத்தை அண்டிய நகரம் எது ?

(1) திருகோணமலை (2) மட்டக்களப்பு (3) முல்லைத்தீவு (4) புத்தளம்

44. மரவேலைப்பாடுகளுக்குப் பிரசித்திபெற்ற இடம்

(1) யாப்பகூவ காவலரண் (2) லோவாமஹாபாய
(3) அம்பக்கை தேவாலயம் (4) இசுறுமுனி விகாரை

www.Edukinniya.lk

45. எல்லாச் சமயத்தினரும் வணங்கித் துதிக்கும் சிவனொளிபாதம் அமைந்துள்ள மாகாணம் எது ?

(1) ஊவா (2) மத்திய (3) கிழக்கு (4) சப்பிரகமுவ

46. இலங்கை மக்களால் சுதந்திர தினம் கொண்டாடப்படுவது.

(1) ஜனவரி 01 ஆந் திகதி (2) பெப்ரவரி 04 ஆந் திகதி
(3) ஏப்பிரல் 13 ஆந் திகதி (4) மே 01 ஆந் திகதி

47. இலங்கையின் தேசியக் கொடி, அரச இலச்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு எது ?

(1) பூவிதழ்கள் (2) நிறைகுடம் (3) அரச இலைகள் (4) வாளேந்திய சிங்கம்

48. எல்லா இலங்கை நாணயத்தாள்களிலும் காணப்படும் ஒரு பொது இயல்பு

(1) நிறைகுடத்தின் உருவம் காணப்படல்
(2) நீர்வீழ்ச்சியின் உருவம் காணப்படல்
(3) இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்பட்டிருத்தல்
(4) நாணயத்தாளின் பெறுமதி சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருத்தல்

49. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் வளையங்களின் நிறங்களுள் மூன்றைக் குறிக்கும் விடையைத் தெரிவு-செய்க.

(1) சிவப்பு, நீலம், மஞ்சள் (2) சிவப்பு, கறுப்பு, ஊதா
(3) கறுப்பு, பச்சை, கபிலம் (4) நீலம், வெள்ளை, சிவப்பு

50. உணவு உட்கொள்ளல் தொடர்பாக எம்மிடம் இருக்க வேண்டிய சிறந்த பழக்கம்

(1) உடனடி உணவுகளை அடிக்கடி பயன்படுத்துதல்
(2) இனிப்புச் சுவையுடைய உணவுகளை அதிகமாக உண்ணல்
(3) பிரதான உணவு வேளைகளில் கீரை வகையொன்றைச் சேர்த்துக் கொள்ளல்
(4) ஓய்வு கிடைக்கும் எல்லா வேளைகளிலும் உணவு உட்கொள்ளல்

51. சிற்றுண்டிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் உரு (1) இலும் (2) இலும் காட்டப்பட்டுள்ள பாத்திரங்களினுள் இடுவதற்குப் பொருத்தமான பொருள்கள் 2 ஐ **ஒழுங்குமுறையில்** காட்டும் விடையைத் தெரிவுசெய்க.





(1) வாழைப்பழத்தோல், கடதாசி
(2) எஞ்சியுள்ள உணவு, கடதாசி
(3) கடதாசி, யோகட் கோப்பை
(4) யோகட் கோப்பை, பிளாஸ்ரிக் மூடி

52. "அகலமான பாதையைக்" காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு யாது ?




(1) (2) (3) (4)

53. அகற்றப்படுகின்ற மழைப்பீலித் துண்டு ஒன்று பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இம்மாற்றுமுறை தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டவற்றுள் சரியானது எது ?




(1) பராமரிப்பது கடினமாகும்.
(2) ஒரே இடத்தில் வைத்து வளர்க்க வேண்டும்.
(3) விலங்குகளிடமிருந்து பாதுகாப்பது கடினமாகும்.
(4) இடவசதி குறைவாகவுள்ள இடங்களில் வளர்ப்பதற்கு உகந்தது.

54. எமக்குத் தகவல்களை 'நேரடி' ஆக வழங்கத்தக்க ஓர் ஊடகம்
(1) பத்திரிகை. (2) கையேடுகள் (3) வானொலி (4) அறிவித்தல்

55. தபால் பெட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பது
(1) திறந்து வைத்தவரின் பெயர் (2) கடிதம் கொண்டிருக்க வேண்டிய கூடிய நிறை
(3) கடிதங்களை எடுக்கும் நேரம் (4) கடிதங்களை எடுக்கும் திகதி

56. A,B ஆகிய சிறிய கண்ணாடிக் குவளைகள் இரண்டிலும் ஆரோக்கியமான பாசிப்பயறு வித்துகள் சம அளவில் இடப்பட்டுள்ளன. குவளை A யின் வித்துகள் நன்கு மூடப்படும் வரை நீர் இடப்பட்டுள்ளது. குவளை B யில் ஈரமான பஞ்சின்மீது வித்துகள் இடப்பட்டுள்ளன. அவ்விரு குவளைகளையும் சூரிய ஒளியுள்ள இடத்தில் வைத்து, சில நாட்களின் பின் சோதித்துப் பார்க்கும்போது கிடைக்கும் அவதானிப்பு எதுவாக இருக்கும்?




(1) குவளை A யின் வித்துகள் நன்றாக முளைத்திருக்கும்
(2) குவளை B யில் வித்துகள் நன்றாக முளைத்திருக்கும்.
(3) A,B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துகள் நன்றாக முளைத்திருக்கும்.
(4) A,B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துகள் முளைத்திருக்காது.

57. மின்குமிழைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர்
(1) ஜோன் லொகி பெயாட் (2) தோமஸ் அல்வா எடிசன்
(3) ஆதர் . சீ. கிளாக். (4) அலெக்சாண்டர் கிரகம் பெல்

58. ஆபத்து ஏற்படுவதற்கு அதிக சாத்தியமுள்ள சந்தர்ப்பம் ஒன்று
(1) வீதி சமிக்ஞையில் சிவப்பு மனிதன் காட்சியளிக்கும்போது மஞ்சட் கடவையினூடாக வாகனங்கள் செல்லுதல்
(2) மின்னல் ஏற்படும் போது வீட்டிலுள்ள பலகைக் கட்டிலின் மீது நித்திரை கொள்ளல்
(3) விளையாட்டு விழா முடிவடைந்தவுடன் பட்டாசு கொளுத்துதல்
(4) உலர்ந்த இறப்பர் கால்மிதியின் மீது நின்றுகொண்டு மின் அழுத்தியினால் துணிகளை அழுத்துதல்

59. ஒருவருடைய காலில் பாம்பு கடித்துள்ள சந்தர்ப்பத்தில் அவருக்கு முதலுதவி வழங்கும்போது முதலில் செய்யவேண்டியது.
(1) பாம்பைக் கண்டுபிடித்து இனங்காணல்
(2) கடித்த இடத்தைத் தூய தண்ணீரால் கழுவுதல்
(3) பந்தனத்தின் (பண்டேஜின்) மூலம் கால்கள் இரண்டையும் கட்டி அசையாது வைத்திருத்தல்
(4) சூடான பானத்தைப் பருகக் கொடுத்தல்

60. "நான் எனது வீட்டுக்கும் பாடசாலைக்கும் நாட்டுக்கும் செய்யவேண்டிய பொறுப்புகளைச் செய்யும் பிள்ளையாவேன்" இவ் எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும் ?
(1) முதலாம் (2) இரண்டாம் (3) நான்காம் (4) ஐந்தாம்

******





more Past papers
at www.Edukinniya.lk